1993 ஏப்ரல் 23]

458—

கிராமங்களிலுள்ள படித்த இளைஞர்களுக்கு ஏற்றுமதித் தொழில் செய்ய கடன் வசதி.

*11279—திரு. கே. செல்வராஜ் :

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமங்களிலுள்ள படித்த இளைஞர்களுக்கு ஏற்றுமதித் துறை தொடர்பான தொழில் செய்ய கடன் வசதி செய்து கொடுத்து உதவ அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

தற்போது படித்து வேலையற்ற இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் உற்பத்தித் தொழிற் கூடங்கள் அமைத்திட ரூ. 35,000 வரை கடனுதவி அளித்து மாவட்டத் தொழில் மையங்கள் வங்கிகளுக்குப் பரிந்துரை செய்கிறது. இது ஏற்றுமதி தொடர்பான தொழில் செய்வதற்குப் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி.பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு எத்தனை படித்த இளைஞர்கள் பயன்பெறுகிறார்கள். அவர்களுக்கு வயது வரம்பு உள்ளதா ? மாவட்ட தொழில் மையம் இதற்கு எந்தவகையில் உதவி புரிகிறது என்பதை அமைச்சர் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் சுமார் 2 இலட்சம் முதல் 2 இலட்சத்து 50 ஆயிரம் வரை படித்த வேலையற்ற இளைஞர்கள் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தொழில் தொடங்குவதற்கு மாவட்ட தொழில் மையம் உதவி புரிந்து வருகிறது. இதற்கு வயது வரம்பு, 10—ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று, 18 வயது முதல் 35 வயது வரை உள்ள அனைத்து வேலையற்ற இளைஞர்களுக்கும் இத்திட்டம் பொருந்தும். மாவட்ட தொழில் மையத்தினுடைய பொது மேலாளர், கடன் உதவி மேலாளர் அவர்களைத் தலைவராக கொண்ட தலைமை வங்கி மற்றும் சம்பந்தப்பட்ட சிறு தொழில் சேவை நிலையம் ஆகியவற்றிலிருந்து பிரதிநிதிகள் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலர்கள் ஆகியவர்களைக் கொண்ட நடவடிக்கைக் குழு ஒன்று இருக்கிறது. இந்தக் குழு தொழில் முனைவர்களை தேர்ந்தெடுப்பது, தொழில் திட்டத்தை கண்டறிந்து தயாரிப்பது, ஒவ்வொரு தொழில் முனைவர்களின் நடவடிக்கையை கண்டறிவது, தொழில் முனை

வர்களுக்கு கடன் தருவதற்கு பரிந்துரை செய்வது, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விரைவாக அனுமதி பெறுவது, முதலிய பணிகளில் மாவட்ட தொழில் மையம் இந்தச் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், படித்த இளைஞர்களுக்கு உதவி புரிந்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏற்றுமதி தொழில் செய்ய இளைஞர்கள் நிறைய பேர் ஆர்வமாக இருக்கின்றார்கள் குறிப்பாக கரூரிலே கைத்தறி துணி ஏற்றுமதி செய்கின்ற வாய்ப்பு அங்கே அதிகமாக இருக்கின்றது. அதே போல, திருப்பூரிலே பனியன் ஏற்றுமதி செய்கின்ற வாய்ப்பும் அங்கே இருக்கின்றது. கரூர், திருப்பூர் போன்ற பகுதிகளில் வாழ்கின்ற படித்த விவரம் தெரிந்த வாலிபர்கள் நிதிவசதி இல்லாமல், அந்தத் தொழிலை செய்வதற்கு வாய்ப்பு இல்லாமல், தனிப்பட்ட முதலாளிகளிடத்திலே போய் வேலைக்கு சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையை அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு, மாவட்ட தொழில் மையம் மூலமாக அதிகமானத் தொகையினை ஒதுக்கி அவர்களுக்கு ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட தொழில் மையத்தின் மூலம் படித்த இளைஞர்களுக்கு அதாவது 10—ஆம் வகுப்பு மற்றும் அதற்கு மேலும் தேர்ச்சி பெற்ற 18 வயது முதல் 35 வயது வரை உள்ள படித்த இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்மூலம் ஏற்றுமதித் தொழில் செய்வதற்கு 35,000 ரூபாய் மாவட்ட தொழில் மையம் மூலம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளைப் பொறுத்தவரையில் அவர்கள் அது குறித்த விவரங்களைத் தருவார்களேயானால் அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்து விட்டு, வேலையில்லாமல் இருக்கிற இளைஞர்களுக்கு இந்த மாவட்ட தொழில் மையத்தில் கடன் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால நானே பல விண்ணப்பங்களை என்டார்ஸ் செய்து அனுப்பியும் அவர்கள் கொடுக்கவில்லை. அவர்கள் வங்கிகளுக்குத்தான் அந்த விண்ணப்பங்களை அனுப்புகிறார்கள். வங்கிகளில் சென்று

1993 ஏப்ரல் 23]

எவ்வளவோ மன்றாடியும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் எல்லாம் அந்த இளைஞர்களுக்குப் பணம் கொடுக்க மறுக்கின்றன. இதைப்பற்றி எல்லாம் நான் பல முறை அந்த மாவட்டத் தொழில் மையத்தில் சென்று பேசி இருக்கிறேன். அவர்கள் வங்கிகளைக் காட்டுகிறார்கள். வங்கிகளிடம் போனால் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த தொழில் செய்கிற இளைஞர்களுக்கு வங்கிகளில் பணம் கொடுப்பதற்கு ஏதாவது தனியாக உத்தரவிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தொழில் மையத்தின் மூலம், மாவட்ட தொழில் மையத்தினுடைய பொது மேலாளர், கடன் உதவி மேலாளர் ஆகியோர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு அந்த வங்கிகளின் அதிகாரிகளோடு அடிக்கடி தொடர்பு கொண்டு இத்தகைய கடன் உதவி பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்து, உதவி செய்து வருகிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கோரிக்கையையும் அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி க. பழனியம்மாள்.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே பதில் கூறும்போது 35 வயது வரை உள்ளவர்களுக்கு இந்தக் கடன் வசதி செய்து தரவேண்டும் என்று கூறி இருக்கிறார்கள். ஆனால் படித்த இளைஞர்களுக்கு பல காலமாக வேலைக்காகக் காத்திருந்து வேலை கிடைக்காத நிலையில் இந்தத் தொழில் செய்வதற்கு முன் வருகிறபோது, அப்படி ஒருசிலர் முன்வருகிறபோது 35 வயதுக்கு மேல் ஒருநாள், இரண்டு நாள் ஆகிவிட்டால் கூட அவர்களுடைய மனுக்களைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள மறுக்கிறார்கள். எனவே இந்தத் தொழில் செய்வதற்கு வரும் போது 35 வயது என்று ஒரு நிர்ணயம் வைக்காமல் 40 வயது வரையாவது அதை உயர்த்தித் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற கேள்வி— மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழ் நாட்டில் தொழில் துறையில் பொற்காலம் படைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு புதிய தொழில் கொள்கையை வகுத்துத் தந்து உள்ளார்கள். அந்தக் கொள்கை அடிப்படையில் இன்றைக்கு பல்வேறு வசதிகள், தொழில் புரிவதற்கு பல சலுகைகள் அளிக்கப்படுகின்றன. இந்தத் திட்டம் 18 வயது முதல்

35 வயது வரை உள்ள இளைஞர்களுக்கு மத்திய அரசின் உதவியோடு நடத்தப்படுவதால் இந்த வயது வரம்பை மத்திய அரசு நிர்ணயிக்கிறது. 35 வயதுக்கு மேலான இளைஞர்களுக்கு, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிற புதிய தொழில் கொள்கை அடிப்படையில் அத்தகைய தொழில் தொடங்குவதற்கு முன்வருவார்களேயானால் அவர்களுக்கு உரிய உதவி கிடைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 459, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

459—

ஆரணி தொகுதியில் பட்டுத் தொழிலை ஊக்குவித்தல்.

* 11323—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதியில் பட்டுத் தொழிலை ஊக்குவிக்க அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

முற்பகல் 10—45

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேடியோவைத் திருப்பினாலும் கூட ''பட்டு ஒத்த பட்டு அது ஆரணிப்பட்டு'' என்கின்ற அளவுக்கு (குறுக்கீடு) காஞ்சீபுரம் பட்டு என்றுகூட வருகிறது. அதோடு சேர்த்து ஆரணியையும் சேர்த்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) அந்த அளவுக்கு இன்றைக்குப் பட்டுத் தொழிலிலே பேர்பேடா ஆரணி